சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 10
பெயர் : தர்மா, த/பெ. மாயக்கிருஷ்ணன்
நாள் : 31.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன அஜித்குமாரும் நானும் அசா 1 சரவணனும் ஒரே தெருவில் தான் வசிக்கிறோம். அஜித்குமார் கொலை செய்யப்பட்டதா சொல்லும் சம்பவத்தை நான் பார்க்கவில்லை. 2021ம் ஆண்டு கதிரவனை கண்ணன் வெட்டியதாக சொல்லப்படும் வழக்கில் நான் ஒரு சாட்சி இல்லை. அந்த சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. கண்ணன் தம்பி சந்திரமோகனை வெடிகுண்டு மற்றும் ஆயுதங்கள் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட விவரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. 20.03.2024 அன்று மாலை நான் வீட்டில் தான் இருந்தேன். என் வீட்டிற்கும் சரவணன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 வீடு தள்ளி இருக்கும். அஜித்தும் சரவணனும் நாயை மேட்டிங் செய்ய போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஒரு ஐந்து பேர் இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்து அஜித்தை வெட்டினார்கள் என்றும் அதை தடுக்க சென்ற சரவணனை வெட்டினார்கள் என்றும் அஜித்தை வெட்டிக்கொன்றுவிட்டார்கள் என்றும் சரவணன் தப்பித்து போய் விட்டார் என்றும் சம்பவம் பெருமாள் கோவில் வீதியில் நடந்தது என்றும் நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட சம்பவத்தை நான் பார்க்வில்லை என்றால் சரி. நான் சரவணனை 9.30 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது போலிசார் அங்கிருந்தனர். நான் சரவணனை மருத்துவமனையில் பார்க்க போனபோது என்னை DSP விசாரிக்கவில்லை மறுநாள் தான் என்னை விசாரித்தார். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அஜித் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்

M. கீ.பீ.ஜே

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரவணனை நான் விசாரிக்கவில்லை என்றாலும் சரவணன் தன்னை வெட்டியது யார் என்று என்னிடம் சொல்லவில்லை என்றாலும் அவர் அரை மயக்கத்தில் இருந்தபோது தட்டி தட்டி எழுப்பி கேட்டேன் அவ்வாறு நான் கேட்கவில்லை அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2,4,9,10 **குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மருத்துவமனைக்சென்ற போது எத்தனை போலிசார் அங்கிருந்தார்கள் என்றால் 5, 6 பேர் இருந்தார்கள். சரவணனை எந்த போலிஸ் விசாரித்தார் என்றால் போலிசார் சரவணனை விசாரித்தபோது நான் அங்கில்லை. அங்கிருந்தவர்கள் சொன்னதை வைத்து தான் சரவணன் மற்றும் இறந்துபோன அஜித்குமாரை தாக்கியது யார் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது நான் சரவணனுடன் இல்லை. சரவணன் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து தஞ்சாவூர் மருத்துவமனைக்கு சென்றபிறகு மறுநாள் காலையில் போலிசார் விசாரித்தார்கள். மறுநாள் காலையில் சவக்கிடங்கு முன்பாக வைத்து விசாரித்தார்கள். அப்போது தான் நான் கேள்விப்பட்ட விவரங்களை சொன்னேன்.

M. G...

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

3/1/21

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 15
பெயர் : ரஜினி
நாள் : 31.07.2025

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு போனேன் என்று நினைவில்லை. நான் வெட்டுப்பட்டவர் கீழே விழுந்து கிடந்ததை பார்த்தேன். நான் எந்த முதலுதவியும் செய்யவில்லை. அதற்கான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அதே நேரத்தில் 10 போலிசார் அங்கு வந்துவிட்டனர். நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்பது நினைவில்லை. போலிசார் விசாரணையில் நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் தேர்தல் பறக்கும் படை வாகனத்தில் மூன்று காவலர்கள் ஒரு ஓட்டுநர், ஒரு கேமராமேன் ஆகியோர் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு உள்ளூர் போலிசார் 10 பேர் வந்தனர். இருசக்கர வாகனத்தை பார்த்து 15 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு போனோம். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலிசார் சொல்லி பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல.

1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அதன் என் முன்பு எனது ஆணையின்படி நீதிமன்ற தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

31/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

31/7/25

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024

அ.சா : 16

பெயர் : ராஜீ

நாள் : 31.07.2025

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். 9.00–9.30 மணிக்குள் சம்பவ இடத்திற்கு சென்றோம். 9.00 மணிக்கு பனந்தோப்பு அருகில் வந்து கொண்டிருந்தோம். 9.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு போய்விட்டோம். எங்கள் எதிரே இருசக்க வாகனத்தில் சென்றார்கள் எத்தனை வாகனத்தில் எத்தனை பேர் போனார்கள் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 9.05 மணிக்கு இருசக்கர வாகனங்களை பார்த்தோம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களில் இருசக்கர வாகனங்களை பார்த்தேன் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று இந்த பணியில் தான் நான் இருந்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 17
பெயர் : தினேஷ்குமார்
நாள் : 31.07.2025

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு 9.00-9.30 மணியளவில் வந்திருப்பேன். நான் முதல் விசாரணையில் 20.03.2024 அன்று இரவு 8.00-9.00 மணிக்குள் மாப்படுகை வழியாக மயிலாடுதுறை வந்துக்கொண்டிருந்தபோது பெருமாள் கோவில் வீதியில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் என்று சொன்ன விவரம் பொய் என்றால் சரிதான். 9.00-9.30 மணியளவில் சோழம்பேட்டையிலிருந்து மயிலாடுதுறை வந்துகொண்டிருந்தேன். பெருமாள் கோவில் தெருவிற்கு சுமார் 9.15 மணிக்கு வந்திருப்பேன். நான் பெருமாள் கோவில் தெருவிற்கு வந்தபோது உள்ளூர் போலிசார் அங்கில்லை. நாங்கள் போய் 10 நிமிடம் கழித்து போலிசார் வந்தார்கள். அந்த 10 நிமிடத்தில் நான் எந்த முதலுதவியும் செய்ய முயற்சிக்கவில்லை என்றால் சரி. போலிசாருக்கு நாங்கள் எந்த தகவலும் சொல்லவில்லை. போலிசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விவரமும் தெரியாது. நாங்கள் பார்த்த எந்த சங்கதிகளையும் சம்பவ இடத்திற்கு வந்த அதிகாரிகளிடமும் சொல்லவில்லை என்றால் சரி. சம்பவ இடத்தில் எங்களை எந்த போலிசாரும் விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு. அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 18
பெயர் : செல்வக்குமார்
நாள் : 31.07.2025

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

20.03.2024 அன்று 15.20 முதல் 15.25 மணி வரை உயர் மின்னழுத்த கோளாறு காரணமாக மயிலாடுதுறை நகர திருவழுந்தூர் மின்பாதையில் மின்தடை ஏற்பட்டதாக சான்றளித்துள்ள விவரம் சரிதான்.

31/07/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்முறைதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

31/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை